செ.வெ.எண்.137/2021 நாள்: 26.10.2021

பத்திரிக்கை செய்தி

(1) கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளினை முன்னிட்டு 01.11.2021 (திங்கட்கிழமை) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்;ர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

(2) 01.11.2021 அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளுர் விடுமுறைக்கு ஈடாக 2021 நவம்பர் திங்கள் இரண்டாவது சனிக்கிழமை (13.11.2021) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

(3) கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்த நாளுக்கு உள்ளுர் விடுமுறை செலவாணி முறிச் சட்டம் 1881 (Under Negotiable Instruments Act 1881)–இன் படி அறிவிக்கப்படவில்லை என்பதால் 01.11.2021 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.